**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.**

**முன்னிலை : திரு.பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 05–ம் நாள்**

**இடைநிலை மனு எண். 01/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 78/2024**

சரசு

.... மனுதாரர் / வாதி

**//எதிர்//**

1. சிந்தாமணி
2. கணேசன்
3. ஆனந்தலட்சுமி
4. செந்தில்குமார்

....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், 1, 4–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. கிருபாகரன், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மேற்படி வழக்கானது மனு சொத்துக்களில் உரிய பாகம் ஏற்பட்டு மனுதாரருக்கு தனி சுவாதீனம் அடையும் வரை மனு சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு எதிர்மனுதாரர்கள் பாராதீனம் செய்யாமல் இருக்கும் வகையில் ஒரு இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டுமென்று

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**<u>2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–</u>**

மனுதாரரின் மூதாதையரான ராமசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது குமாரர்களான ரேணு, பெருமாள், புள்ளார், கங்கன், கோபால், முருகேசன் ஆகியோருக்கு கடந்த 1970–ம் ஆண்டிலேயே வாய்மொழியாக பாகம் செய்து கொடுத்து அந்த வகையில் மனு சொத்துக்களில் "அ" பட்டியலில் உள்ள சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனார் புள்ளார் மற்றும் மனுதாரரின் குடும்பத்தினருக்கு பாகமாக வந்தடைந்து மனுதாரர்களது கூட்டு சுவாதீனத்தில் இன்றளவிலும் இருந்து வருகிறது. மனுதாரரது தகப்பனார் தனது சுய சம்பாத்தியத்தில் பொடார் கிராம புல எண் 43/2–னை கிரையம் பெற்று அனுபவித்து வந்து அதில் ஒரு பகுதியினை சங்கீதா (எ) வசந்தி என்பவருக்கு தனது சொந்த தேவைக்காக விற்பனை செய்தது போக மீதமுள்ள "ஆ" பட்டியல் சொத்துக்களை எவருக்கும் எழுதி வைக்காமல் கடந்த 15.10.2023–ம் தேதியில் விறுப்புறுதியின்றி இறந்துவிட்டார். மனுதாரரது தகப்பனார் புள்ளார் 15.10.2023–ம் தேதியில் இறந்த போது அவரது மனைவி 1–ம் பிரதிவாதி சிந்தாமணி, 2–ம் பிரதிவாதி கணேசன், 3–ம் பிரதிவாதி ஆனந்தலட்சுமி, 4–ம் பிரதிவாதி செந்தில்குமார் ஆகியோருடன் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார். மனுதாரரது தகப்பனார் இறந்த பிறகு 4–ம் பிரதிவாதி தன்னிச்சையாக செயல்பட்டு ஏதோ வருவாய்த்துறை ஆவணங்களை மாற்றம் செய்ய முற்பட்டதால் அதுகுறித்து ஆட்சேபணை செய்து சட்டஅறிவிப்பு ஒன்றினை வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பி அதன் பிறகு அது சம்பந்தமாக நடைபெற்ற வாய்மொழி விசாரணையின் போது 4–ம் பிரதிவாதி மனுதாருக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் தெரிவிக்காமல் ஏதோ மோசவிதமான ஆவணத்தினை உருவாக்கி கொண்டிருப்பதாக அறிந்து வில்லங்க சான்று பெற்று பார்த்த போது மனு சொத்தின் "அ" பட்டியல் சொத்துக்களில் 2–ம் இன சொத்தில் மட்டும் ஒரு

பெரும் பகுதியினை குறித்து மோசடியான ஒரு ஆவண பதிவினை உருவாக்கி உள்ளதனை அறிய வந்தார். அவ்வாறு மனுதாரரின் தந்தை புள்ளார் என்பவர் உரிய பாக பிரிவினை எதுவும் செய்யாமல் பூர்விக சொத்தினை குறித்து தம்மிச்சையாக பாராதீனம் செய்ய உரிமை ஏதும் பெற்றிருக்கவில்லை. அவ்வாறான ஆவணம் எதுவும் நடைமுறையிலும் இருந்திடவில்லை. மற்ற சொத்துக்கள் அனைத்தும் இன்றளவிலும் பிரிப்படாமல் இருந்து வருகிறது. மனுதாரரும் பிரதிவாதிகள் அனைவரும் வாரிசு அடிப்படையில் யாதொரு பாகமும் ஏற்படாத மனு சொத்தின் "அ" பட்டியல் சொத்துக்களை கூட்டு சுவாதீனத்திலும் அனுபவத்திலும் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள். மனுதாரரும் பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வரும் "அ" பட்டியல் சொத்துக்களின் பேரில் ஏற்பட்ட மோசடியான ஒரு ஆவண பதிவினை உருவாக்கி உள்ளதனை குறித்து பிரதிவாதிகளிடம் முறையிட்ட போதும் அவர்களே அறிந்த காரணங்களுக்காக யாதொரு பேச்சு வார்த்தைக்கும் உடன்படவில்லை. மனுதாரரின் பாக உரிமையினை ஏமாற்ற முற்பட்டதனை அறிந்து இவ்வழக்கினை பாக உரிமைக்காக தாக்கல் செய்யவேண்டிய அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டது. எது எப்படியிருப்பினும் மனு சொத்தின் "அ" பட்டியல் சொத்துக்களிலும் மற்றும் "ஆ" பட்டியல் சொத்துக்களில் சங்கீதா (எ) வசந்தி என்பவருக்கு விற்பனை செய்தது போக மீதம் உள்ள நிலத்திலும் மனுதாரருக்கு 1/5 பங்கு பாத்தியம் இருந்து வருகிறது. 1 முதல் 4 ம் பிரதிவாதிகளுக்கும் தலா 1/5 பங்கு உரிமையினையும் பெற்று உள்ளனர். மனுதாரருடைய கூட்டு உரிமைக்கும் கூட்டு அனுபவத்திற்கும் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்றினைந்து கடந்த 25.02.2024 தேதியில் தாவா சொத்திலிருந்து வெளியேற வேண்டும் என மிரட்டியும், இதர தாவா சொத்துக்களில் யாதொரு உரிமையும் கொண்டாட கூடாதென தெரிவித்தும், மனுதாரரின் பாக உரிமைக்கு எதிராக இடையூறு செய்யவும் முயன்றார்கள். மனுதாரர் பொதுவர்கள் துணையோடு பிரதிவாதிகள் அப்புறப்படுத்தாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகளை

மேற்கொண்டார். பிரதிவாதிகள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்படாதவர்கள். மனுதாரருக்கு தெரியாமல் பிரதிவாதிகள் மனுதாரரின் பாக உரிமைக்கு எதிராக மோசடியான விதத்தில் ஆவணங்களை பதிவு செய்ய போவதாகவும் மிரட்டி வருவதால், மனுதாரருக்குரிய பங்கு பிரிந்து தனி சுவாதீனம் கிடைத்திடும் வரை ஒரு இடைகால தடை உறுத்துக்கட்டளை வழங்க வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**<u>3. எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். வாதி இந்த தாவாவை தாக்கல் செய்யவில்லை. வாதியின் சகோதரரான 2-ம் பிரதிவாதி கணேசன் மற்றும் அவரது மகன் துனிவுமணி ஆகியோரின் தூண்டுதலின்பேரில் அவர்கள் சொல்படி இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். துனிவுமணி என்பவர் நீதிமன்றத்தில் நீதிமன்ற ஊழியராக பணிப்புரிந்து வருகிறார். தாவா சொத்துக்கள் வாதியின் தந்தையான புள்ளார் என்பவருக்கு சுயாஜ்ஜீதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அந்த சொத்துக்களின் ஒரு பகுதியான பொடார் கிராம சர்வே எண் 45/1சி-ல் 1 ஏக்கர் 51 சென்ட் நிலமும் அதில் உள்ள கிணறு, 5 எச்.பி மின் இணைப்பு, கால்வாய் மற்றும் பாதை பாத்தியம் உட்பட தனது மகனான 4-ம் பிரதிவாதி பெயரில் கடந்த 20-05-2022 தேதியில் தன் சுயவிருப்பத்தின்பேரில் தானப்பத்திரம் எழுதி பாத்தியப்படுத்தியதாகவும், அதை அனுசரித்து அந்த சொத்துக்களை 4-ம் பிரதிாவதி அனுபவித்து வருகிறார். அதேபோல் இறந்த புள்ளார் தனக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு 4-ம் பிரதிவாதியின் மனவையான சங்கீதா (எ)வசந்தி என்பவருக்கு தன்விருப்பதன் பேரில் எவ்வித பிரதிபிரஜோனமும் பெறாமல் தனது மருமகள் என்ற முறையில் கிரையப்பத்திரம் செய்து வைத்துள்ளார். ஆனால் தாவாவில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து

சங்கீதா(எ) வசந்தி மூன்றாம் நபர் போல காண்பித்து தாவா சொத்து பூர்வீக சொத்து என கூறி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். இறந்த புள்ளார் உயிருடன் இருக்கும்போதே தனது மகள்களான வாதி சரசு மற்றும் 3-ம் பிரதிவாதி ஆனந்தலட்சுமி ஆகியோருக்கு இறந்த புள்ளாரும் அவரது மனைவியான இந்த பிரதிவாதியும் தகுந்த சீர்வரிசைகள் செய்து ஒவ்வொருவருக்கும் தலா சுமார் 25 பவுன் நகை அணிவித்து இருவருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டார். அதாவது வாதி சரசுவிற்கு 1987-ஆம் ஆண்டும், 3-ம் பிரதிவாதி ஆனந்தலட்சுமிக்கு 1988-ஆம் ஆண்டும் திருமணம் செய்து வைத்தார். ஆனால் தாவாவில் வாதியின் வயதையும் பிரதிவாதியின் வயதையும் தாவாவிற்காக குறைத்து காண்பித்துள்ளார்கள், தாவா சொத்து பூர்வீக சொத்து என கூறும் வாதி அதற்குண்டான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. வாதி திருமணம் ஆன நாளில் இருந்து அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் அவரது மகன் அரசாங்க பணியில் இருந்து வருகிறார். வாதியோ அவரது கணவர் மற்றும் மகனோ யாரும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை. அதேபோல் 2,3 பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை, கூட்டு சுவாதினத்திற்கு இடையூறு செய்ததாக தாவாவில் கூறியுள்ளது விந்தையாகவும், வியப்பாகவும் உள்ளது. தாவாவிலும், வழக்குமூலத்திலும் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யாகும், உண்மைக்கு மாறானதும் ஆகும். 20-05-2022 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மென்ட் ஆவண எண் 3532/2022 ஆவணம் சட்டப்படி நியாயப்படியும் செல்லும் உண்மையான ஆவணமும் ஆகும். அதை வாதி செல்லாது என கோருவது ஏற்புடையது அல்ல. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்றாகும்.

**4.<u>தீர்வுக்கான பிரச்சனை :-</u>**

1. மனுதாரர் மனு அனுமதிக்க கூடியதா ? என்பதே ஆகும்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**6.தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரரின் மூதாதையரான ராமசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது குமாரர்களான ரேணு, பெருமாள், புள்ளார், கங்கன், கோபால், முருகேசன் ஆகியோருக்கு கடந்த 1970–ம் ஆண்டிலேயே வாய்மொழியாக பாகம் செய்து கொடுத்து அந்த வகையில் மனு சொத்துக்களில் "அ" பட்டியலில் உள்ள சொத்துக்கள் மனுதாரரின் தகப்பனார் புள்ளார் மற்றும் மனுதாரரின் குடும்பத்தினருக்கு பாகமாக வந்தடைந்து மனுதாரர்களது கூட்டு சுவாதீனத்தில் இன்றளவிலும் இருந்து வருகிறது என்றும், மனுதாரரது தகப்பனார் தனது சுய சம்பாத்தியத்தில் பொடார் கிராம புல எண் 43/2–னை கிரையம் பெற்று அனுபவித்து வந்து அதில் ஒரு பகுதியினை சங்கீதா (எ) வசந்தி என்பவருக்கு தனது சொந்த தேவைக்காக விற்பனை செய்தது போக மீதமுள்ள "ஆ" பட்டியல் சொத்துக்களை எவருக்கும் எழுதி வைக்காமல் கடந்த 15.10.2023–ம் தேதியில் விருப்புறுதியின்றி இறந்துவிட்டார் என்றும், மனுதாரரது தகப்பனார் புள்ளார் 15.10.2023–ம் தேதியில் இறந்த போது அவரது மனைவி 1–ம் பிரதிவாதி சிந்தாமணி, 2–ம் பிரதிவாதி கணேசன், 3–ம் பிரதிவாதி ஆனந்தலட்சுமி, 4–ம் பிரதிவாதி செந்தில்குமார் ஆகியோருடன் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றும், மனுதாரரது தகப்பனார் இறந்த பிறகு 4–ம் பிரதிவாதி தன்னிச்சையாக செயல்பட்டு ஏதோ வருவாய்த்துறை ஆவணங்களை மாற்றம் செய்ய முற்பட்டதால் அதுகுறித்து ஆட்சேபணை செய்து சட்டஅறிவிப்பு ஒன்றினை வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பி அதன் பிறகு அது சம்பந்தமாக நடைபெற்ற வாய்மொழி விசாரணையின் போது 4–ம் பிரதிவாதி மனுதாரருக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் தெரிவிக்காமல் ஏதோ மோசவிதமான ஆவணத்தினை உருவாக்கி கொண்டிருப்பதாக அறிந்து வில்லங்க சான்று

பெற்று பார்த்த போது மனு சொத்தின் "அ" பட்டியல் சொத்துக்களில் 2–ம் இன சொத்தில் மட்டும் ஒரு பெரும் பகுதியினை குறித்து மோசடியான ஒரு ஆவண பதிவினை உருவாக்கி உள்ளதனை அறிய வந்தார் என்றும், மனு சொத்தின் "அ" பட்டியல் சொத்துக்களிலும் மற்றும் "ஆ" பட்டியல் சொத்துக்களில் சங்கீதா (எ) வசந்தி என்பவருக்கு விற்பனை செய்தது போக மீதம் உள்ள நிலத்திலும் மனுதாரருக்கு 1/5 பங்கு பாத்தியம் இருந்து வருகிறது என்றும், 1 முதல் 4 ம் பிரதிவாதிகளுக்கும் தலா 1/5 பங்கு உரிமையினையும் பெற்று உள்ளனர் என்றும், மனுதாரருக்கு தெரியாமல் பிரதிவாதிகள் மனுதாரரின் பாக உரிமைக்கு எதிராக மோசடியான விதத்தில் ஆவணங்களை பதிவு செய்ய போவதாகவும் மிரட்டி வருகிறார் என்றும் எடுத்துரைத்தார். ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வாதி இந்த தாவாவை தாக்கல் செய்யவில்லை என்றும், வாதியின் சகோதரரான 2–ம் பிரதிவாதி கணேசன் மற்றும் அவரது மகன் துனிவுமணி ஆகியோரின் தூண்டுதலின்பேரில் அவர்கள் சொல்படி இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்துக்கள் வாதியின் தந்தையான புள்ளார் என்பவருக்கு சுயாஜ்ஜீதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், அந்த சொத்துக்களின் ஒரு பகுதியான பொடார் கிராம சர்வே எண் 45/1சி–ல் 1 ஏக்கர் 51 சென்ட் நிலமும் அதில் உள்ள கிணறு, 5 எச்.பி மின் இணைப்பு, கால்வாய் மற்றும் பாதை பாத்தியம் உட்பட தனது மகனான 4–ம் பிரதிவாதி பெயரில் கடந்த 20–05–2022 தேதியில் தன் சுயவிருப்பத்தின்பேரில் தானப்பத்திரம் எழுதி பாத்தியப்படுத்தியதாகவும், அதை அனுசரித்து அந்த சொத்துக்களை 4–ம் பிரதிாவதி அனுபவித்து வருவதாகவும், அதேபோல் இறந்த புள்ளார் தனக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு 4–ம் பிரதிவாதியின் மனவையான சங்கீதா (எ) வசந்தி என்பவருக்கு தன்விருப்பதன் பேரில் எவ்வித பிரதிபிரஜோனமும் பெறாமல் தனது மருமகள் என்ற முறையில் கிரையப்பத்திரம் செய்து வைத்ததாகவும், ஆனால் தாவாவில் வாதி மேற்படி சங்கதிகளை மறைத்து சங்கீதா(எ) வசந்தி

மூன்றாம் நபர் போல காண்பித்து தாவா சொத்து பூர்வீக சொத்து என கூறி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், இறந்த புள்ளார் உயிருடன் இருக்கும்போதே தனது மகள்களான வாதி சரசு மற்றும் 3–ம் பிரதிவாதி ஆனந்தலட்சுமி ஆகியோருக்கு இறந்த புள்ளாரும் அவரது மனைவியான இந்த பிரதிவாதியும் தகுந்த சீர்வரிசைகள் செய்து ஒவ்வொருவருக்கும் தலா சுமார் 25 பவுன் நகை அணிவித்து இருவருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டதாகவும், வாதி திருமணம் ஆன நாளில் இருந்து அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் அவரது மகன் அரசாங்க பணியில் இருந்து வருகிறார் என்றும், வாதியோ அவரது கணவர் மற்றும் மகனோ யாரும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், அதேபோல் 2,3 பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், ஆனால் தாவாவில் கூட்டாக விவசாயம் செய்து வருவதாக பொய்யாக கூறி உள்ளார்கள் என்றும், 20–05–2022 தேதியிட்ட 4–ம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மென்ட் ஆவண எண் 3532/2022 ஆவணம் சட்டப்படி நியாயப்படியும் செல்லும் உண்மையான ஆவணம் என்றும், அதை வாதி செல்லாது என கோருவது ஏற்புடையது அல்ல என்றும் எடுத்துரைத்தார்.

வழக்கில் இருதரப்பிலும் கூறும் சங்கதிகளை பரிசீலிக்கையில் மனுதாரர் இவ்வழக்க்கை பாகம் மற்றும் விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார். மேற்படி  இரு தரப்பிலும் கூறும் சங்கதிகள் குறித்து வழக்கு விரிவான விசாரணையின் போது தான் அதன் விவரம் தெளிவாக தெரிய வரும். 1, 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரர் பாகத்தினை ஏமாற்றும் நோக்கத்தில் செயல்பட்டு வந்து மனு சொத்தினை பொறுத்து மோசடியான முறையில் ஆவணங்களை தயாரித்து கொடுத்துள்ளதால் மனுதாரர் இனியும் மனு சொத்தில் எதிர்மனுதாரர்களுடன் கூட்டாக அனுபவிக்க முடியாது என்பதால் மனுதாரர் இந்த மனுவினை மனு சொத்துக்களை நலம் தீது கலந்து 5 சம பங்குகளாக பிரித்து அதில் 1 பாகத்தினை பெறுவதற்காக வேண்டியும் இம்மனுவினை

தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், எது எவ்வாறு இருந்தாலும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு இடையில் பாகம் வழக்கு நிலுவையில் இருந்து வருவதால், தரப்பினர்களில் ஏதேனும் ஒருவர் வழக்கு சொத்தைப் பொறுத்து பராதீனம் செய்தால் அது மற்ற தரப்பினர்களையும் பாதிக்கும் என்பதாலும், மேற்படி மனுச் சொத்தில் வழக்கு முடியும் வரை எவ்வித வில்லங்க பாராதீனம் செய்யாமல் இருப்பதுதான் இருதரப்பினர்களுக்கும் நன்மை பயக்க கூடியதாகும். மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் மனுதாரரால் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தில் அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித ஆவண பதிவுகளும் செய்யாமல் இருக்க தற்காலிக தடை உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (17.02.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P
Digitally signed by THIRUGNANASAMBANDAM P
Subordinate Judge, Uthangarai.

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை .
<u>2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை.

THIRUGNANASAMBANDAM P
Digitally signed by THIRUGNANASAMBANDAM
Subordinate Judge, Uthangarai.

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**IA.01/2024 in**
**OS.No.78/2024**
**Fair/ Draft Order**
**Date :17.02.2026**